**கவனிக்க .**– *2015. 12. 04 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1945 - 2015 දෙසැම්බර් මස 11 වැනි සිකුරාදා - 2015.12.11

*1945 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி II – சட்ட சம்பந்தமானது

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| சட்டமூலங்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | 266 |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பெயர் பட்டியல் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 266 |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான
### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2016,சனவரி மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, திசெம்பர் மாதம் 18 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யு. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள்

## 18/MB ஆம் இலக்க வழக்குடன் தொடர்புடைய புத்தளம் மாவட்ட நீதி மன்றத்தின் பிஸ்கால் மூலம் செய்யப்படும் விற்பனை அறிவித்தல்

**பெறுமதிமிக்க சொத்து பிரசித்த ஏல விற்பனை**

***வட மேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், புத்தளம் காணிப்பதிவகப் பிரிவிற்கு உட்பட்ட, கற்பிட்டி கோரளை, அக்கரைப்பத்து வடக்கு பத்துவ, கந்தக்குடா என்ற கிராமத்தில் அமைந்துள்ள, கரடிக்குளித் தோட்டம், சந்தித் தோட்டம் மற்றும் கந்தக்குடா எஸ்டேட் என்ற காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் திரு. எம். எச். சாபர் அவர்களினால் 2011. 11. 09 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 1378 ஆம் இலக்க எல்லை நிர்ணயித்து பிரித்து வேறாக்கப்பட்ட காணி.***

***(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 20பே.)***

***காணியும் அதனுள் அமைந்துள்ள மரம், செடி, பழவகை, கட்டிடம் உட்பட அனைத்தும் அடங்களாக, இது புத்தளம் காணிப் பதிவகத்தில் Q 213/82 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.***

***ஆதனத்திற்குச் செல்லும் பாதை: கல்பிட்டி பாலாவிப் பாதையில் 13 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ள கந்தக்குடா சந்தியால் கற்பிட்டி-பாலாவிப் பாதையில் 800 மீற்றர் அளவு சென்று வலது பக்கமாக இருக்கும் துணைப்பாதையில் இன்னும் 01 மீ. சென்றவுடன் பாதையின் வலது பக்கமாக குறிப்பிட்ட ஆதனம் அமைந்துள்ளது.***

*பிரதி பிஸ்கால் மூலம்*

*2016 ஆம் ஆண்டுசனவரி மாதம் 18 ஆந் திகதி திங்கட்கிழமை மு. ப. 11.00 மணிக்கு ஆதனம் அமைந்துள்ள இடத்தில் ஏலவிற்பனை செய்யப்படும்.*

***கொடுப்பனவு செய்யும் முறை.*** *- ஏலவிற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும் :-*

*(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 25% (நூற்றுக்கு இருபத்தி ஐந்து) ;*
*(2) மாகாண அதிகார சபையின் வரியாக 1% (நூற்றுக்கு ஒன்று) விற்பனை வரி;*
*(3) பிஸ்கல் கமிஷாக விற்பனை விலையில் 2.5% (இரண்டரை சதவீதம்) ;*
*(4) அனைத்து விளம்பரக் கட்டணங்களும்;*
*(5) எழுதுவினைஞர் மற்றும் அறிவிப்பாளர் கட்டணம் 500 ரூபா ;*
*(6) விற்பனைச் செலவுகள் மற்றும் ஏனைய கட்டணங்கள் இருப்பின் அவையும் ;*
*(7) விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரை வரி.*

** குறிப்பிட்ட ஆதனத்தின் விற்பனை, நீதி மன்றத்தின் அனுமதியின் பிரகாரம் செய்யப்படும்.*

*கொள்முதல் விலையின் மிகுதி 75% மான பணத்தை விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் மேற்கண்ட வழக்கின் கணக்கில் வைப்புச் செய்யப்படல் வேண்டும்.*

*மேற்கண்டவாறு பணத்தை 30 நாட்களுக்குள் மேலே சொல்லப்பட்ட முழுப் பணத்தையும் செலுத்தாவிடின் ஏற்கனவே செலுத்திய பணத்தை திருப்பிச் செலுத்தாமல் விடவும், மீண்டும் ஆதனத்தை ஏல விற்பனை மூலம் விற்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.*

*உரிமைப் பத்திரங்களையும் வேறு விபரங்களையும் பரிசீலிக்கவும் , மேலதிக விபரங்களுக்கும்" பிரதேச முகாமையாளர், மக்கள் வங்கி, பிரதேச அலுவலகம், மக்கள் வங்கிக் கட்டிடம், (1 ஆம் மாடி), இல. 79, மாரவில வீதி, நாத்தாண்டிய" என்ற முகவரியிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.*

*தொலைபேசி: 032- 2253300, 032- 2253301*
*தொலைநகல் : 032- 2255247.*

*பதிவாளர்/பிரதி பிஸ்கால்,*
*மாவட்ட, நீதிவான் நீதிமன்றம்,*
*புத்தளம்.*

*12- 434*

---

# நானாவித அறிவித்தல்கள்

## செக்குயரிங் எ லைப் போ எவ்ரிவன் நிறுவனத்தைக் (ஸேப்) கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

*விஜேபால ஹெட்டியாரச்சி ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் 48 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் "செக்குயரிங் எ லைப் போ எவ்ரிவன்" நிறுவனத்தைக் (ஸேப்) கூட்டிணைப்பதற்காக சட்டம் எனப்படும் சட்ட மூலமொன்றை பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.*

*பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த நிறுவனத்தைக் கூட்டிணைப்பதே சட்ட மூலத்தின் நோக்கமாகும் : -*

*(1) பாடசாலை மாணவர்களை ஊக்கப்படுத்துவதற்காக ஊக்குவிப்பு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல்;*

*(2) முன் பாடசாலை சிறார்களுக்கு கல்வி வழங்கலும், புலமைப்பரிசில்கள் வழங்கலும்;*

*(3) மக்களின் ஒழுக்க மற்றும் கலாச்சார விழுமியங்களைப் பாதுகாப்பதற்கும் பேணுவதற்கும் வழிவகைகளை மேற்கொள்ளல்*

*பிறவும்.*

*விஜேபால ஹெட்டிஆராச்சி,*
*பாராளுமன்ற உறுப்பினர்.*

*12-400*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.